# 3 மாதங்களில் 4,205 மாணவர்கள் மெட்ரோவில் பயணம்

■ சென்னை

மெட்ரோ ரயில்களின் இயக்கம் குறித்தும், பொதுபோக்குவரத்து வசதி குறித்தும் பள்ளி மாண வர்களுக்கு விழிப்புணர்வு ஏற் படுத்தும் வகையில் அவர்கள் மெட்ரோ ரயில்களில் அழைத்து செல்லப்படுகின்றனர். இந்த பய ணத்தின்போது மெட்ரோ ரயில் இயக்கம், ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கப்படு கின்றன.

கடந்த நவம்பர், டிசம்பர் மற் றும் ஜனவரி என இந்த 3 மாதங் களில் மட்டும் 4,205 பேர் மெட்ரோ ரயில் பயணம் மேற்கொண்டனர். இதேபோல், பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளையும் மெட்ரோ ரயிலில் கல்வி பயணம் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.